**2020ஆம் வருடம் நவம்பர் மாதம் 11.11.2020ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.Y. சுரேந்திரன், பி.இ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

## பொருள் : 1

இந்நகராட்சிக்கு சொந்தமான நகர பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (வட கிழக்கு பகுதி) சுங்க வசூல் இனத்திற்கு 2020–21 முதல் 2022–2023 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட 04.11.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ஒருவரும் செலுத்தவில்லை. ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.என்.சரவணன் என்பவர் ரூ.14,25,600/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டை காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் கோரப்பட்டுள்ளது. எனவே உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.14,25,600/–ஐ ஏற்று குத்தகை ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. திரு. என்.சரவணன் என்பவரது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.14,25,600/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2020–21 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகை செலுத்தவும், 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் :2

இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜகோபால் பூங்கா கட்டண கழிப்பிடம் சுங்க வசூல் இனத்திற்கு 2020–21 முதல் 2022–2023 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட 04.11.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ஒருவரும் செலுத்தவில்லை. ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் திரு.கே.சேகர் த/பெ காளியப்பன் என்பவர் ரூ.8,11,125/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டை காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் கோரப்பட்டுள்ளது. எனவே உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8,11,125/–ஐ ஏற்று குத்தகை ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. திரு. கே.சேகர் த/பெ காளியப்பன் என்பவரது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8,11,125/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2020–21 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகை செலுத்தவும், 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 3**

இந்நகராட்சிக்கு சொந்தமான முகமதலி கிளப் ரோடு வணிக வாளகம் சைக்கிள் நிலையம் சுங்க வசூல் இனத்திற்கு 2020–21 முதல் 2022–2023 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட 04.11.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ஒருவரும் செலுத்தவில்லை. ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் திரு.கே.பார்த்திபன் த/பெ கிருஷ்ணன் என்பவர் ரூ.13,01,600/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டை காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் கோரப்பட்டுள்ளது. எனவே உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.13,01,600/–ஐ ஏற்று குத்தகை ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. திரு.கே.பார்த்திபன் த/பெ கிருஷ்ணன் என்பவரது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.13,01,600/–ஐ மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2020–21 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகை செலுத்தவும், 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான பலப்பகுட்டை சிறுவர் சிறுமியர் பூங்கா சுங்க வசூல் இனத்திற்கு 2020–21 முதல் 2022–2023 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட 04.11.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ஒருவரும் செலுத்தவில்லை. ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் திரு.ஏ.ஆர்.நூர்தீன் என்பவர் ரூ.5,76,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டை காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும் கோரப்பட்டுள்ளது. எனவே உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,76,000/–ஐ ஏற்று குத்தகை ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. திரு.ஏ.ஆர்.நூர்தீன் என்பவரது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,76,000/–ஐ மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2020–21 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகை செலுத்தவும், 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 5**

தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் 3136 எண்ணிக்கை தெருவிளக்குகளை 2எண்ணிக்கை மின்பணியாளர், 3எண்ணிக்கை மின்பணி உதவியாளர்களை கொண்டு சரியாக பராமரிக்க முடிவதில்லை. இதனால் பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே தெருவிளக்களை நல்லமுறையில் பராமரிக்க வார்டு எண் 1 முதல் 17 வரை 17வார்டுகளை தனியார் மூலம் பராமரிக்க 2019–2020 ஆண்டுக்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ40.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகர் மன்ற தீர்மான எண்50 நாள் 31.05.2019ல் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி கோரி அனுப்பப்பட்டதின் பெயரில் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13899/2016/DO1 நாள்24.01.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வழங்கப்பட்டதினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1). ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்

2). மன்றம் பதிவு செய்யலாம் மற்றும் செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர்(பொ)**
**தருமபுரி நகராட்சி**

**2020ஆம் வருடம்  நவம்பர் மாதம் 11.11.2020ம் நாள் புதன்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசர கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 5 வரை | 271 முதல்  275 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.

**2020ஆம் வருடம் நவம்பர் மாதம் 24.11.2020ம் நாள் செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.Y. சுரேந்திரன், பி.இ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

**பொருள் எண்: 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான முகமது அலி கிளப் ரோடு வணிக வளாகம் இருசக்கர வாகண நிறுத்துமிடம் சுங்க கட்டணம் வசூல் செய்துகொள்வதற்கு குத்தகைக்குவிட 04.11.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கொரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் தி.கே.பார்த்திபன் த/பெ.கிருஷ்ணன் என்பவர் ரூ.13,01,600/–க்கு கேட்டிருந்தார் இத்தொகைக்கு குத்தகை காயம் செய்ய மன்ற தீர்மானம் எண்.273 நாள்.11.11.2020–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020–2021–ம் ஆண்டிற்கான குத்தகை உரிமம் தொகை, வருமாணவரி, மின் பாதுகாப்பு கட்டணம், தொழில் வரி செலுத்துமாறு இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.6147/2014/அ3 நாள்.11.11.2020–ல் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.பார்த்திபன் என்பவர் மேற்படி குத்தகை தொகை அதிகமாக உள்ள காரணத்தாலும் கொரானா காலமாக உள்ளதால் இருசக்கர நிறுத்துமிடத்திற்கு வாகனம் சரியாக வருவதில்லை எனவே தன்னால் நடத்த இயலாது என 12.11.2020–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார் இதனால் குத்தகை நிபந்தனைபடி இவர் செலுத்தியுள்ள டேவனி தொகை பறிமுதல் செய்துகொள்ளவும், மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மறு ஏலம் விடுவதால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படும் பட்சத்தில் திரு.பார்த்திபன் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொண்டு இழப்பீடு தொகை வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 2**

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனங்கள் **04.11.2020** அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கொரப்பட்டது.

1. புறநகர் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் வட மேற்கு
2. புறநகர் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் தென் கிழக்கு
3. நகர பேருந்து நுழைவுக் கட்டணம் மற்றும் ஷேர் ஆட்டோ சுங்க கட்டணம்
4. புறநகர் பேருந்து நுழைவுக் கட்டணம் சுங்கம் வசூல்

மேற்கண்ட நான்கு இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. எனவே இரண்டாம் முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நகராட்சியின் வருவாய் கருத்தில் கொண்டு மேற்படி குத்தகை இனங்களை பொது ஏலம் விட்டு குத்தகைதாரருக்கு ஒப்படைக்கும் நாள்வரை நகராட்சி பணியாளர்களைக் கொண்டு துறை மூலம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் : 3**

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு **2020–21** முதல் **2022–2023** வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட **19.11.2020** அன்று இரண்டாவது முறையாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ஒருவரும் செலுத்தவில்லை. எனவே ஏலம் நடைபெறவில்லை கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) | சென்றாண்டு/ மூன்றாண்டு சராசரி தொகைக்கு |
|---|---|---|---|---|
| **1** | புறநகர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (வட மேற்கு பகுதி) | திரு.கே.நஞ்சன் த/பெ காளியப்பன் | **25,10,000/–** | **அதிகம்** |
| | | திரு.பி.சுரேஷ் த/பெ.பெருமாள் | 22,00,900/– | குறைவு |
| **2** | புறநகரபேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் சுங்க வசூல் (தென்கிழக்கு) | திரு.கே.நஞ்சன் த/பெ காளியப்பன் | **29,10,000/–** | **அதிகம்** |
| | | திரு.பி.சுரேஷ் த/பெ.பெருமாள் | 28,01,609/– | குறைவு |
| **3** | நகரபேருந்து நிலைய பேருந்துகள் நுழைவு கட்டணம் மற்றும் ஷேர் ஆட்டோக்கள்சுங்க வசூல் | திருமதி.பி.வெண்னிலா | 3,60,000/– | குறைவு |
| | | திரு.பி.வீரா த/பெ பழனி | 4,01,000/– | குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| **4** | நகரபேருந்து நிலையம் பொருள் பாதுகாப்பு அறை மற்றும் வர்த்தக ஒலிபெருக்கி விளம்பரம் | ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் வரப்பெற வில்லை | | |
| **5** | புறநகரபேருந்து நிலைய பேருந்துகள் நுழைவு கட்டணம் சுங்க வசூல் | திருமதி.பி.வெண்னிலா | 15,90,000/– | குறைவு |
| | | திரு.பி.வீரா த/பெ பழனி | **17,25,000/–** | **அதிகம்** |

அலுவலகக்குறிப்பு

1. வரிசை எண்.1–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற திரு.கே.நஞ்சன் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரிசை எண்.2–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற திரு.கே.நஞ்சன் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரிசை எண்.3–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் சென்ற ஆண்டு தொகையை விட குறைவாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட குறைவாகவும் கோரப்பட்டுள்ளது. மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
4. வரிசை எண்.4–ல் உள்ள இனத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் வரப்பெற வில்லை மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
5. வரிசை எண்.5–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற திரு.பி.வீரா என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
6. 2020–21 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகை செலுத்தவும், 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர்(பொ)**
**தருமபுரி நகராட்சி**

**2020ஆம் வருடம் நவம்பர் மாதம் 24.11.2020ம் நாள் செவ்வாய் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசர கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 3 வரை | 276 முதல் 278 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.

**2020ஆம் வருடம் நவம்பர் மாதம் 30.11.2020ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.Y. சுரேந்திரன், பி.இ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

**பொருள் எண்: 1**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 23 டவுன் நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு சுற்றுசுவர் மற்றும் கழிவறை அமைக்கும் பணிக்கு 19.11.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஐ.பயாஸ் | 0.27% மதிப்பீட்டைவிடஅதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட வரிசை பண் 1ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்: 2**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 28 நெசவாளர் காலனியில் கல்வெர்ட் அமைக்கும் பணிக்கு 19.11.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1 | திரு.சி.குட்டிமணி | 0.49% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஐ.பயாஸ் | 0.09% மதிப்பீட்டைவிடஅதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட வரிசை பண் 1ல் கண்ட திரு.சி.குட்டிமணி அவர்கள் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்: 3**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 1 மதிகோண்பளையம் நகராட்சி பள்ளியில் SMART CLASS ROOM மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ள 19.11.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.07% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஐ.பயாஸ் | 0.35% மதிப்பீட்டைவிடஅதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட வரிசை பண் 1ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்:4**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் உள்ள நகராட்சி கழிவறைகளை மராமத்து பணிக்கு 19.11.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1 | திருமதி.கே.முழுமதி | 7.64% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | ஸ்ரீசக்திகன்ஷக்சன் | 0.21% மதிப்பீட்டைவிடஅதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட வரிசை பண் 1ல் கண்ட திருமதி.கே.முழுமதி அவர்கள் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்:5**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 16 லட்சுமி காலனிக்கு மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு 19.11.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1 | திரு.ஐ.பயாஸ் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.02% மதிப்பீட்டைவிடஅதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட வரிசை பண் 1ல் கண்ட திரு.ஐ.பயாஸ் அவர்கள் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

தனி அலுவலர்
மற்றும் ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி

**2020ஆம் வருடம்  நவம்பர் மாதம் 30.11.2020ம் நாள் திங்கள் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 5 வரை | 279 முதல் 283 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.